DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARAIKUDI.

CCNo. 611/2022 PW . 5

Name :சரவணன்	Fathers Name : கண்ணன்
Village:	Taluk :
Age :	Occupation :
Caste :	Religion :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.01.2024

எதிரி ஆஜர்

முதல் விசாரணை:

நான் சர்ச் 2ம் வீதியில் வசித்து வருகிறேன். பஞ்சர் கடை வைத்துள்ளேன். 10.09.2016 அன்று இரவு 7.45 மணியளவில் நான் சானாம்காளியம்மன் கோவில் அருகே சென்று கொண்டிருந்தபோது சம்பவ சாலையில் மகாலட்சுமி என்பவர் கத்திக்கொண்டிருந்தார். அவரிடம் சென்று கேட்டபோது அவர் கழுத்தில் அணிந்திருந்த 8பவுன் தங்க செயினை இருசக்கர வாகனத்தில் சம்பவ இடத்தில் சென்று கொண்டிருந்தபோது நபர் ஒருவர் பறித்து சென்றதாக என்னிடம் கூறினார். பின்னர் இதுகுறித்து நடவடிக்கை எடுக்குமாறு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்திற்கு புகார் அளிப்பதற்காக மகாலட்சுமியுடன் நானும் உடன் சென்றேன். இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை:

நான் சர்ச் 4வது வீதியில் கடை வைத்துள்ளேன். அந்த கடைக்கும் சானாம்காளியம்மன் கோவிலுக்கும் சுமார் 2 கி.மீட்டர் தொலைவு இருக்கும். 10.09.2016 அன்று நான் என்னவெல்லாம் செய்தேன் என்றால் நினைவு இல்லை. அந்த தேதியில் என்ன நடந்தது என்று போலீசார் என்னிடம் சொன்னார்களா என்றால் இல்லை. மகாலட்சுமி சொன்னதன் அடிப்படையில் என்ன நடந்தது என்று தெரியும். நேரடியாக தெரியாது.

மறு விசாரணை: இல்லை